**1990 சுவஸரிய மன்றம் - 2019**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

1990 சுவஸரிய மன்றத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகழ்விரிவான வருமானக்கூற்று, திரண்ட நிதியத்தின் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

மன்றத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலாப நோக்கம் கொண்டிருக்காத அமைப்புகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட கணக்கீட்டு பரிச்சயங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலாப நோக்கம் கொண்டிருக்காத அமைப்புகளுக்காக பரிந்துரைக்கப்பட்ட கணக்கீட்டு பரிச்சயங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஒன்றாகக் காணப்படுவதுடன் முகாமைத்துவமானது மன்றத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- தெரிவித்துக் கொண்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை பெற்றுக்கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு மற்றத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு மன்றத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மன்றம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 அமைப்பின் தொடர்ந்து இயங்கும் தன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 ஏப்ரல் 24 திகதி சுகாதார அமைச்சு மற்றும் GVK EMRI Lanka (Private) Ltd. நிறுவனத்துடன் கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் 2018 இன் 18 ஆம் இலக்க 1990 சுவஸெரிய மன்றச் சட்டத்தின் பிரிவு 26(இ) இன் பிரகாரம், சுவஸெரிய மன்றத்தின் செயற்பாடுகளுக்காக செலவிடப்படும் மீண்டுவரும் செலவுகள் அரசாங்கத்தினால் மீளளிப்புச் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 திகதி வரை அரசாங்கத்தினால் மீளளிப்புச் செய்திருக்காத மொத்த மீண்டுவரும் செலவு ரூபா 337,179,826 தொகையாக காணப்பட்டதுடன், அச் செலவுகள் மூலதனச் செலவுகளுக்காக கிடைத்திருந்த நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. அதே போல் 2019 ஆண்டிற்காக அரசாங்கத்தினால் மன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகள் 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது முறையே 25 சதவீதம், 50 சதவீதம் மற்றும் 75 சதவீதம் வரை குறைப்பதற்கு 2019 ஆகஸ்ட் 27 திகதி அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், நிதி ஏற்பாடுகள் குறைக்கப்பட்ட பின்னர் மன்றத்தை நடாத்திச் செல்வதற்கான பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கும் படி அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அவ்வாறான பிரேரணை ஒன்று 2021 ஜனவரி 31 திகதி வரை சமர்ப்பித்திருக்காததுடன், இந்த நிலைமை மன்றத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை நிழவுவது தொடர்பாக நேரடியாக தாக்கம் ஏற்படுத்தக் கூடும் என அவதானிக்கப்பட்டது. | முகாமை என்ற வகையில் உரிய அனைத்து ஆவணங்கள் மற்றும் உரிமைகள் குறிப்பிட்ட அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டதெனவும், மொத்தச் செலவுகள் மீளளிப்புச் செய்யப்படாமல் செயற்பாட்டு அலுவல்களை செயற்திறனுடன் செயற்படுத்துவதில் கடினங்கள் தொடர்பாக சுட்டிக் காட்டியது என, ஒரு வருகைக்கு 2 டொலர் வீதம் அறவீடு செய்வதற்காக திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டு காணப்பட்ட போதிலும், அரசாங்கம் மாற்றமடைதல் மற்றும் அமைச்சுக்கள் மாற்றமடைதல் காரணமாக அது செயற்படுத்தப்படாததுடன் 2021 ஆம் ஆண்டின் போது மன்றம் மீண்டும் புதிய அமைச்சு ஒன்றின் கீழ் கொண்டுவரப்பட்ட காரணத்தினால் புதிய அமைச்சருடன் இது தொடர்பாக கலந்துரையாடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது எனவும் கொவிட் - 19 நெருக்கடி காலத்தில் மற்றும் அதற்கு முன்னர் பொது மக்களுக்கு வழங்கிய சேவையினை கவனத்தில் எடுத்து நிதியம் வழங்குமாறு விண்ணப்பித்துள்ளது என. | இது தொடர்பாக பொறுப்புச் சொல்லவேண்டிய தரப்பினருடன் கலந்துரையாடி நிறுவனம் பாதங்கள் இன்றி நடாத்திச் செல்வதற்காக பொருத்தமான பொறிமுறை ஒன்று நிறுவப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய கணக்குகள்

### 1.6.1 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மன்றத்தினால் 2018 ஆம் ஆண்டின் போது உஷ்ட கம்பளம் (Thermal Blanket) 627 தொகை கொள்வனவு செய்வதற்காக ரூபா 4,583,511 தொகைக்கு சமமான 28,572 அமெரிக்க டொலர்கள் குறிப்பிட்ட வழங்குனருக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் 225 தொகை கம்பளங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. மீதியான 402 கம்பளங்களுக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 2,545,754 தொகைக்குச் சமமான 18,319 அமெரிக்க டொலர்களை திருப்பி அறவீடு செய்வதற்காக போதிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்திய வழங்குனரிடம் ரூபா 2,545,754 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்திருந்த போதிலும் 2020 மார்ச் மாதத்தில் இந்தியாவில் கொவிட் - 19 தொற்றுநோய் பரவியிருந்த காரணத்தினால் அச் செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது என. | 402 உஷ்ண கம்பளங்களை பெற்றுக் கொள்வதற்கு அல்லது பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2006 இன் 12 ஆம் இலக்கம் கொண்ட முத்திரைக் கட்டண (விஷேட ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 1465/19 ஆம் இலக்கங் கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல் | ஏதேனும் ஒரு கொடுப்பனவு ரூபா 25,000 இனை மிகைக்கும் சந்தர்ப்பத்தில் வழங்கப்படும் பற்றுச் சீட்டிற்காக ரூபா 25 முத்திரை வரி அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், மன்றத்தினால் சட்டத்தின் பிரகாரம் முத்திரை வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் சம்பளம் செலுத்தும் போது சம்பளத்தில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 305,062 தொகைக்கான முத்திரை வரி மன்றத்தினால் செலவிடப்பட்டிருந்தது. | 2019 ஜூன் மாதம் முதல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முத்திரை வரி அறவிடப்படுகின்றது என | முத்திரை வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் முத்திரை வரி அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 507 மற்றும் 756 | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வருடாந்த பண்டக் | சுற்றறிக்கைகள் மற்றும் நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை |

| | | | |
|---|---|---|---|
| மற்றும் 2016 மார்ச் 31 திகதிய 05/2016 இலக்கங் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கை | கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு 2020 ஜுன் 15 திகதிக்கு முன்னர் பண்டக் கணிப்பீட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என | அறிவுரைகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 392,433,414 இற்கான பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 209,501,025 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளின் ரூபா 182,932,389 இற்கான வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு மன்றத்தின் நேர் செலவுகள் அதிகரித்தல் மற்றும் ஏனைய செயற்பாடுகளில் இருந்து கிடைத்த வருமானம் குறைவடைதல் பிரதானமான காரணமாக இருந்தது. எவ்வாறாயினும் மன்றம் இலாப நட்ட நோக்கு இன்றிய அமைப்பொன்றென்பதனால் மன்றத்தில் மூலதனச் செலவுகளை மேற்கொள்வதற்காக இந்திய அரசாங்கத்தினால் வழங்கியிருந்த உதவிநிதியைப் பயன்படுத்தி இப் பற்றாக்குறையினை தீர்த்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1,992 தொகை எனினும் அத் திகதியில் உள்ளவாறான பதவியணி 1,423 தொகையாக இருந்தமையால் பதவியணிப் பற்றாக்குறை 569 ஆக இருந்ததுடன், அவற்றில் 313 பேர் நோயாளர் காவு வண்டிச் சாரதிகள் ஆகும். | 2019 ஆகஸ்ட் மாதத்திற்கு முன்னர் ஆட்சேர்க்கப்பட்ட பதவியணியினருக்கு போதியளவு சம்பளம் காணப்படாமையால் மன்றத்தில் இருந்து விளகி சென்றிருந்ததுடன் சம்பளம் அதிகரிக்கப்பட்ட பின்னர் ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்று ஆரம்பிக்கப்பட்டதுடன் 2019 ஆகஸ்ட் மாதத்தில் நேர்முகப் பரீட்சை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்தமையால் அதனை காலதாமதிக்க நேரிட்டது. அதன் பின்னர் 2019 நவம்பர் மாதத்தில் மீள் அறிவித்தல் வரை ஆட்சேர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என அமைச்சு அறிவித்தது என மற்றும் 2021 பெப்ரவரி மாதத்தில் ஆட்சேர்ப்பதற்கு ஆரம்பிப்பதற்காக அனுமதி | முறைப் பிரகாரம் அத்தியவசிய பதவியணிக்காக ஆட்சேர்ப்பதற்கும் அத்தியவசியம் அல்லாத பதவிகள் இருப்பின் அவற்றை கீழ்படுத்தி பதவியணி திருத்தம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கிடைத்தமையால் அரச பிரமாணங்களுக்கு இணங்க ஆட்சேர்ப்பு வேலைத் திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டு வருகின்றது. | |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 18 ஆம் இலக்கம் கொண்ட 1990 சுவஸெரிய மன்ற சட்டத்தின் பிரிவு 2(2) இன் பிரகாரம், 2003 ஜுன் 02 ஆந் திகதிய இலக்கம் பீ.ஈ.டீ 12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கைகள் பிரகாரம் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மன்றத்தினால் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் ஒரு வருடத்திற்கு மிகையான தாமதத்துடன் 2021 மே 06 ஆந் திகதி கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2019 இல் மன்றம் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சின் கீழ் காணப்பட்டதுடன், 2019 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் சுகாதார அமைச்சிற்கு வழங்கப்படவில்லை எனவும் மற்றும் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு 2020 ஆண்டின் போது தொடர்பு ஏற்படுத்திய பின்னர் 2018 மற்றும் 2019 நிதிக் கூற்றுக்கள் நேரடியாக அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது என. | பொது முயற்சிகள் சுற்றிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் குறிப்பிட்ட திகதியில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 திகதிய PFD/RED/01/04/2014/01 இலக்கங் கொண்ட நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் நீண்டகால நோக்குடன் குறிப்பிட்ட சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை பெற்றுக் கொள்வதற்காக இலக்கு ஆகிய செயற்பாடுகள் அடங்கிய வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 133 மற்றும் 2009 ஜூன் 09 ஆம் திகதிய DMA/2009(1) இலக்கங் கொண்ட முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் தமது கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக மன்றத்தில் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. | மன்றத்தில் காணப்படும் கணக்காய்வு குழுவினால் மன்றத்தின் செயற்பாடுகள் மற்றும் அதன் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக கணக்காய்வு செய்த போதிலும் அவர்களின் விடயப் பரப்பில் நிதிக் கணக்காய்வு காணப்படவில்லை எனவும் 2018 ஆண்டிற்கான கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் மீளளிப்புக்காக உரிய அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டிருப்பதனால் அந்த அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதென கருதியதாகவும் மற்றும் 2021 ஆண்டின் போது நேரடியாக திறைசேரியில் இருந்து ஏற்பாடுகள் கிடைப்பதனால் புதிதாக கணக்காய்வு அலகு ஒன்று நிறுவுவதற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படும் என. | உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று முறைப் பிரகாரம் நிறுவப்பட வேண்டும். |

### 4.4 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 ஜூன் 09 ஆந் திகதிய இலக்கம் DMA/2009(1), 2016 ஜனவரி 28 திகதிய இலக்கம் DMA/2009(1)(i) கொண்ட முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் காலாண்டிற்கு 01 என்ற வகையில் ஒரு ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மன்றத்தினால் மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் குழுக் | 2019 ஆண்டின் போது அனைத்து கொடுப்பனவு உறுதிச் சான்றுகளும் உரிய அமைச்சுக்களுக்கு ஒப்படைக்கப்பட்டதெனவும், அமைச்சுக்களில் காணப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களுக்காக மன்றத்தின் பிரதிநிதி பங்குபற்றியதாகவும் மற்றும் 2020 ஆண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நியமனம் செய்யப்பட்ட போதிலும் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் காலாண்டிற்கு 01 ஆக ஆண்டிற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 04 நடாத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கூட்டங்கள் எதுவும் நடாத்தியிருக்கவில்லை. | தொற்றுநோய் நிலைமைகள் காரணமாக திட்டமிடப்பட்டவாறு கூட்டங்கள் நடாத்த முடியாமல் போனது என | |

**4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை வழிகாட்டல் கோவையின் 5.2.5 வழிகாட்டலின் பிரகாரம் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டின் பிரதி ஒன்று நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மன்றத்தினால் மீளாய்வாண்டிற்காக பாதீடு ஒன்று தயாரித்திருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குவது என மற்றும் சுற்றறிக்கையின் படி எதிர்காலத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வருடாந்த பாதீடு அனுப்பப்படும் என. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

**4.6 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆகஸ்ட் 14 திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 இலக்கங் கொண்ட தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சுச் செயலாளரினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ‘‘2030 ஆண்டு நிகழ்ச்சித் திட்டம்’’ தொடர்பாக மன்றம் அறிந்திருக்காமையால் தனது விடயப் பரப்பிற்கு கீழ்வரும் கருமங்கள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள், இலக்கு மற்றும் இலக்குகளை நெருங்க வேண்டிய திருப்பு முனைகளும் இலக்குகளை நெருங்குவதனை அளவை செய்வதற்கான சுட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்காக செயற்பட்டு அவற்றை நிறைவேற்றிக் கொள்வதுடன் எதிர்காலத்தில் இவ் விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடி அமைச்சுக்களின் மூலம் வழங்கும் சுட்டிகளை மிகவும் நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சுச் செயலாளரினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |